TN PUBLIC EXAM

# QUESTION PAPER

2024



aglasem.com

No. of Printed Pages : **4**

**7691**

பதிவு எண் | | | | | | | |

# Part III — Vocational Subjects

# வேளாண் அறிவியல்

# AGRICULTURAL SCIENCE

( தமிழ் வழி / Tamil Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** வேளாண் தட்பவெப்ப மண்டலங்களில் மிகப்பெரியது __________.

(அ) காவிரி டெல்டா மண்டலம் (ஆ) மேற்கு மண்டலம்

(இ) வடகிழக்கு மண்டலம் (ஈ) தெற்கு மண்டலம்

**2.** கொடுக்கப்பட்டுள்ள பயிர்களில் எது பயறுவகைப் பயிர் ?

(அ) சோளம் (ஆ) உளுந்து (இ) கோதுமை (ஈ) கம்பு

**3.** அறுவடை செய்யப்பட்ட பயிர்களின் அடிக்கட்டைகளை மீண்டும் பயிர் சாகுபடிக்கு அனுமதித்தல் __________ எனப்படும்.

(அ) மறுதாம்பு சாகுபடி (ஆ) தொடர்ச்சியான சாகுபடி

(இ) ஊடுபயிர் சாகுபடி (ஈ) தொடர் சாகுபடி

[ திருப்புக

4. 'C' வடிவில் வளைக்கப்பட்ட அடிமண் உழவுக் கலப்பை __________.
(அ) உளிக் கலப்பை (ஆ) சட்டிக் கலப்பை
(இ) இரும்புக் கலப்பை (ஈ) திருப்புக் கலப்பை

5. பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவர் __________.
(அ) டாக்டர் மா.சு. சுவாமிநாதன் & சி. சுப்ரமணியம்
(ஆ) நார்மன் எ. போர்லாக்
(இ) அர்னான் & ஸ்டௌவ்
(ஈ) டாக்டர் வர்கீஸ் குரியன்

6. தாவரங்களால் பயன்படுத்தப்படும் நிலநீர் வகை :
(அ) உறிஞ்சு நீர் (ஆ) புவியீர்ப்பு நீர்
(இ) நுண்புழை நீர் (ஈ) மேற்கண்ட அனைத்தும்

7. பண்படுத்தப்பட்ட நிலத்தில் விதைகளை இடுதல் __________ எனப்படும்.
(அ) அறுவடை (ஆ) நடவு
(இ) விதைப்பு (ஈ) மேற்கண்ட அனைத்தும்

8. சொட்டுநீரின் வழியாக ஊட்டச்சத்துகளைக் கொடுக்கும் முறைக்கு __________ என்று பெயர்.
(அ) உரப்பாசனம் (ஆ) குறிப்பிட்ட இடத்தில் இடுதல்
(இ) வான்வழித் தெளிப்பு (ஈ) பரந்து தூவுதல்

9. தேர்திறனற்ற களைக்கொல்லி __________.
(அ) பாரகுவாட் டைக்ளோரைடு (ஆ) அட்ரசின்
(இ) பென்டிமெத்தலின் (ஈ) 2, 4 - D

10. அகழி பாசன முறையில் __________ மீ இடைவெளியில் அகழிகள் வெட்டப்படுகின்றன.
(அ) 7 (ஆ) 5 (இ) 3 (ஈ) 4

11. பூச்சிகளைப் பற்றி படிக்கும் அறிவியலுக்கு __________ என்று பெயர்.
(அ) எண்டமாலஜி (ஆ) பயாலஜி
(இ) ஃபிசியாலஜி (ஈ) பேதாலஜி

12. பாலைத் தயிராக்க உதவும் நுண்ணுயிரி __________.
(அ) சக்கரோமைசிஸ் (ஆ) ஈஸ்ட்
(இ) அஸ்பர்ஜில்லஸ் (ஈ) லேக்டோபேசில்லஸ்

13. __________ எக்டர் நிலம் வைத்திருந்தால் அவர் சிறு விவசாயி என்று கருதப்படுகிறார்.
(அ) 10.0 (ஆ) 1.5 (இ) 5.0 (ஈ) 3.0

14. முறையற்ற பாணியில் அமைந்துள்ள தோட்டம் __________.
(அ) இத்தாலிய தோட்டம் (ஆ) முகலாய தோட்டம்
(இ) ஜப்பானிய தோட்டம் (ஈ) பாரசீக தோட்டம்

15. வண்ண மீன் வளர்ப்பில் வளர்க்கப்படும் முட்டையிடும் மீன் __________.
(அ) கத்தி வால் (ஆ) தங்க மீன்
(இ) பிளாட்டி (ஈ) மத்தி மீன்

## பகுதி - II

குறிப்பு : **ஏதேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

16. இந்தியாவில் பின்பற்றப்படும் பருவகால வகைப்பாட்டினைப் பயிர்களுடன் எழுதுக.

17. வெண்மைப் புரட்சி என்றால் என்ன ?

18. தீவனப் பயிர்களின் நான்கு வகைகள் யாவை ?

19. நாற்றாங்காலின் வகைகள் யாவை ?

20. மண் அரிமானம் – குறிப்பு வரைக.

21. இரண்டாம் நிலை உழவுக் கருவிகள் – குறிப்பு வரைக.

22. உரங்களை ஊட்டச்சத்துகளின் எண்ணிக்கையைப் பொருத்து எவ்வாறு வகைப்படுத்தலாம் ?

23. விதை நேர்த்தி என்றால் என்ன ?

24. நன்னீர் மீன் வளர்ப்பு என்றால் என்ன ?

25. ஒட்டுண்ணித் தன்மையை அடிப்படையாகக் கொண்டு களைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம் ?

26. பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்டறிய பயன்படுத்தப்படும் கண்காணிப்புப் பொறிகள் யாவை ?

27. வேளாண் விரிவாக்கம் என்றால் என்ன ?

28. நில எழிலூடுதலுக்கு ஏற்ற பூ மரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

[ திருப்புக

## பகுதி - III

குறிப்பு : **எவையேனும் 5** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **35 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

29. சொட்டு நீர் பாசனத்தின் நிறைகளை எழுதுக.

30. ஒருங்கிணைந்த களை மேலாண்மையின் நோக்கம் பற்றி எழுதுக.

31. விதை, தானியம் – வேறுபடுத்துக.

32. பூந்தொட்டிகளை எவ்வாறு பராமரிப்பது ?

33. உரப் பயிர்களைப் பற்றி விவரிக்கவும்.

34. பூச்சிகள் அதிக அளவில் தோன்றக் காரணங்கள் யாவை ?

35. உன்னுடைய பகுதியில் பின்பற்றப்படும் பயிர் சுழற்சி என்ன ? அதன் பயன்களைப் பற்றிக் குறிப்பிடுக.

## பகுதி - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **இரண்டு** பக்க அளவில் விடையளிக்கவும். **2x10=20**

36. (அ) பயிர் நோய்களின் பொதுவான அறிகுறிகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) பயிரிடப்படும் பயிர்களில் பின்பற்றப்படும் பல்வேறு உரமிடும் முறைகளை விவரிக்கவும்.

37. (அ) நீர்ப்பாசன முறைகள் என்றால் என்ன ? உன்னுடைய பகுதியில் செய்யும் ஏதேனும் இரண்டு பாசன முறைகளையும், அதன் நிறை குறைகளையும் எழுதுக.

**அல்லது**

(ஆ) மீன்களைத் தாக்கும் நோய்களைப் பற்றி எழுதி அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் விவரிக்கவும்.

- o O o -

No. of Printed Pages : **4**

**7707(A)**

பதிவு எண் | | | | | | | |

# Part III – Vocational Subjects

# வேளாண் அறிவியல்

# AGRICULTURAL SCIENCE

( தமிழ் வழி / Tamil Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** ''ஆடு பயிர் காட்டும்; ஆவாரை நெல் காட்டும்'' என்ற பழமொழி __________ பற்றி உணர்த்துகிறது.

(அ) இரசாயன உரமிடல் (ஆ) செயற்கை உரமிடல்

(இ) இயற்கை உரமிடல் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

**2.** 3 - 10 நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு __________.

(அ) மத்திய கால முன்னறிவிப்பு (ஆ) குறுகிய கால முன்னறிவிப்பு

(இ) நீண்ட கால முன்னறிவிப்பு (ஈ) நிகழ் கால முன்னறிவிப்பு

[ திருப்புக

3. களி மண்ணில் களித்துகள்கள் _________ சதவீதம் இருக்கும்.
(அ) 35 - 45 (ஆ) 10 - 25 (இ) 40 - 50 (ஈ) 30 - 40

4. பூ நறுமணப் பயிர் _________.
(அ) கிராம்பு (ஆ) புதினா (இ) ஏலக்காய் (ஈ) மல்லிகை

5. அக்ரானமி என்பது _________ மொழியில் இருந்து வந்த சொல்லாகும்.
(அ) இலத்தீன் (ஆ) தமிழ் (இ) சமஸ்கிருதம் (ஈ) கிரேக்கம்

6. 'C' வடிவில் வளைக்கப்பட்ட அடிமண் உழவுக் கலப்பை _________.
(அ) உளிக் கலப்பை (ஆ) சட்டிக் கலப்பை
(இ) இரும்புக் கலப்பை (ஈ) திருப்புக் கலப்பை

7. அடுத்த சந்ததியை உருவாக்கும் கருவுற்ற முதிர்ந்த சூலகம் _________.
(அ) நாற்று (ஆ) தானியம் (இ) சூல் பை (ஈ) விதை

8. வட்டப்பாத்திப் பாசனம் _________ பயிருக்கு ஏற்றது.
(அ) தென்னை (ஆ) பருத்தி (இ) கரும்பு (ஈ) நெல்

9. சொட்டு நீரின் வழியாக ஊட்டச்சத்துக்களைக் கொடுக்கும் முறைக்கு _________ என்று பெயர்.
(அ) உரப்பாசனம் (ஆ) குறிப்பிட்ட இடத்தில் இடுதல்
(இ) வான்வழித் தெளிப்பு (ஈ) பரந்து தூவுதல்

10. களைகளால் பயிரில் ஏற்படும் பாதிப்பின் அளவு _________.
(அ) 45 சதம் (ஆ) 20 சதம் (இ) 5 சதம் (ஈ) 30 சதம்

11. நெல் தண்டு துளைப்பானுக்கு எதிர்ப்புத் திறன் கொண்ட இரகம் _________.
(அ) IR 36 (ஆ) ADT 40 (இ) CO - 7 (ஈ) IR 20

12. பயிரை அதிகமாகத் தாக்கும் நோய்க்காரணி _________.
(அ) பூசணம் (ஆ) பாக்டீரியா
(இ) ஃபைட்டோபிளாஸ்மா (ஈ) நச்சுயிரி

**13.** விதைகளிலுள்ள தேவையற்ற பொருட்களை சலித்துப் பிரித்தலுக்கு __________ என்று பெயர்.
(அ) சுத்தம் செய்தல் (ஆ) தரம் பிரித்தல் (இ) உலர்த்துதல் (ஈ) தூற்றுதல்

**14.** வேலைக்குப் பயன்படும் மாட்டினம் __________.
(அ) கிர் (ஆ) சிந்தி (இ) காங்கேயம் (ஈ) சாஹிவால்

**15.** கெண்டை ஒரு __________ மீன் வகை.
(அ) குளிர் நீர் (ஆ) நன்னீர் (இ) கடல் நீர் (ஈ) உவர் நீர்

## பகுதி - II

குறிப்பு : **எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

**16.** பசுமைப் புரட்சி என்றால் என்ன ?

**17.** வடகிழக்குப் பருவகாலம் பற்றி எழுதுக.

**18.** தானியப் பயிர்கள் பற்றி எழுதுக.

**19.** தொடர் சாகுபடி என்றால் என்ன ?

**20.** ஊடுழவுக் கருவிகள் யாவை ?

**21.** பாத்திப் பாசனம் என்றால் என்ன ?

**22.** பேரூட்டச் சத்துக்கள் – குறிப்பு வரைக.

**23.** ஒருங்கிணைந்த களை கட்டுப்பாடு என்றால் என்ன ?

**24.** எண்டெமிக் பூச்சிகள் பற்றி எழுதுக.

**25.** பயிர் முதிர்ச்சியை எவ்வாறு கண்டறியலாம் ?

**26.** வேளாண் காப்பீட்டுத் திட்டங்கள் யாவை ?

**27.** கால்நடை உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் நான்கினை எழுதுக.

**28.** வண்ணமீன் வளர்ப்பு பற்றி எழுதுக.

[ திருப்புக

## பகுதி - III

குறிப்பு : **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **35 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

**29.** இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் பணிகள் யாவை ?

**30.** தட்ப வெப்பநிலையின் முக்கியத்துவம் யாது ?

**31.** உவர்மண், களர்மண் – வேறுபடுத்துக.

**32.** பயிர் சுழற்சியின் நன்மைகளை எழுதுக.

**33.** சொட்டுநீர்ப் பாசனம் என்றால் என்ன ? அதன் நிறைகளை எழுதுக.

**34.** களைகளால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.

**35.** பதப்படுத்துதல் என்றால் என்ன ? பதப்படுத்தும் முறைகளை வரிசைப்படுத்துக.

## பகுதி - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2x10=20**

**36.** (அ) பேரிடர் மேலாண்மை பற்றி விளக்குக.

**அல்லது**

(ஆ) விதை உறக்கநிலை நீக்குதல் பற்றி விளக்குக.

**37.** (அ) சிறப்பு வகை வேளாண் கருவிகளை பட்டியலிட்டு பயன்களை எழுதுக.

**அல்லது**

(ஆ) உரப்பயிர்களை பற்றி விரிவாக எழுதுக.

- o 0 o -

# QUESTION PAPERS

GET PREVIOUS YEAR QUESTION PAPERS FOR ALL CLASSES FOR CBSE, ISCSE, ISC AND ALL ALL STATE BOARDS HERE AT AGLASEM.COM

BOARD WISE

- Andhra Pradesh Board Question Papers
- Assam Board Question Papers
- Bihar Board Question Papers
- Chhattisgarh Board Question Papers
- Goa Board Question Papers
- Gujarat Board Question Papers
- Haryana Board Question Papers
- Himachal Pradesh Board Question Papers
- J&K State Board Question Papers
- Jharkhand Board Question Papers
- Karnataka Board Question Papers
- Kerala Board Question Papers
- Madhya Pradesh Board Question Papers
- Maharashtra State Board Question Papers
- Manipur Board Question Papers
- Meghalaya Board Question Papers
- Mizoram Board Question Papers
- Nagaland Board Question Papers
- Orissa Board Question Papers
- Punjab Board Question Papers
- Rajasthan Board Question Papers
- Tamil Nadu Board Question Papers
- Telangana State Board Question Papers
- Tripura Board Question Papers
- Uttarakhand Board Question Papers
- Uttar Pradesh (UP) Board Question Papers
- West Bengal (WB) Board Question Papers